**பிரித்தானிய அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டம் (யூ.கே. இரும்புப்பால செயற்திட்டம்-கட்டம் - I) - 2014**

---

பிரித்தானிய அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டத்தின் (யூ.கே. இரும்புப்பால செயற்திட்டம்-கட்டம் -I செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, தேசிய நெடுஞ்சாலைகளில் இரும்புப் பாலங்களை நிர்மாணிப்பதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் வரையறுக்கப்பட்ட கொங்கொங் மற்றும் சங்கை வங்கியில் கூட்டுறவு பொதுக் கம்பனிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 நவம்பர் 16 ஆம் திகதிய 53 எம்/எவ்சீ 1207 (2007027/எஸ்எல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின்படி, முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அமுலாக்கும் முகவராகவும் உள்ளன. செயற்திட்டத்தின் நோக்கமாவது.

(அ) 222 கிராமியப் பாலங்களின் வடிவமைப்பு அளவையிடல் மற்றும் வழங்கல்

(ஆ) நடைமுறைப்படுத்தல் மற்றும் பாலங்களைப் பொருத்தலுக்கான உப பாகங்களை வழங்குதல்

(இ) அவசர ஒரு வழி பாலங்களை வழங்குதல் மற்றும்

(ஈ) மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் பாலங்களைப் பொருத்தலிற்காக யூகே தொழில் நுட்ப உதவி 4 ஆண்டுகளிற்கு மேலான பயிற்சி என்பவற்றை வழங்குதல் என்பவற்றின் மூலம் வீதி உட்கட்டமைப்பை விரிவுபடுத்தி பலப்படுத்தல் என்பதாகும்.

கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,784 மில்லியனானதுடன் அதில் ரூபா 11,284 மில்லியனிற்குச் சமனான யூகே பவுன்ஸ் 50 மில்லியன் வரையறுக்கப்பட்ட கொங்கொங் மற்றும் சங்கை வங்கியில் கூட்டுறவு பொதுக் கம்பனியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2008 சனவரி 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2012 சனவரி 22 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல் இடப்படுத்தப்பட்டது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், என்பவற்றைத் தொடர்ந்து செல்லும்

அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபாரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் காசோட்டக் கூற்று செயற்பாட்டு நிதியளிப்பு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை வெவ்வேறாகவும் தெளிவாகவும் காட்டக் கூடியவாறு எஸ்எல்பீஏஎஸ் - 02 இற்கிணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | ஐ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன |
| கொடையளிக்கும் முகவர் | 50.0 | 11,284.0 | - | - | 16,173.6 |
| இலங்கை அரசாங்கம் | 46.5 | 10,500.0 | 39.0 | 55.7 | 8,046.7 |
| மொத்தம் | 96.5 | 21,784 | 39.0 | 55.7 | 24,220.3 |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ஆரம்ப ஒப்பந்தம் வழங்குனரின் ஒத்திசைவுடனும் அமைச்சரவையின் அனுமதியுடனும் 2007 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில் எட்டு சந்தர்ப்பங்களில் பின்னர் திருத்தப்பட்டிருந்தது. ஆகையால், 5,563 லீனியர் மீற்றர் நீளத்திலான 222 சரிப்படுத்தக்கூடிய பாலங்கள் 4,672 லீனியர் மீற்றர் நீளத்துடனான 169 பாலங்களாக குறைக்கப்பட்டது. மேலும், 1,484 லீனியர் (மீற்றர் நீளத்திலான) ஐந்து மேம்பாலங்களும் சேர்க்கப்பட்டன. ஒப்பந்த முன்னேற்றங்களின் ஆரம்ப நோக்கெல்லையில் ஏற்பட்ட அத்தகைய அடிக்கடியான மாற்றங்களின் விளைவாக செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு பாலங்கள் நிர்மாணத்தின் சரியான இடங்கள், நீளம், அகலம் மற்றும்

முன்னுரிமை என்பவற்றை இணங்காணத் தவறியிருந்தது. அதன் மீதான பாலங்களின் ஆரம்ப திட்டங்களும் மாற்றப்பட்டிருந்தன.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

| பாலங்களின் வகை | பாலங்களின் எண்ணிக்கை | | நிருமாணிக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு இணங்கியவை | வழங்கப்பட்டமை | | | |
| மேம் பாலங்கள் | 5 | 5 | 5 | - | --- |
| விரைவு பாலங்கள் | 59 | 59 | 52 | - | - |
| சீ 200 பாலங்கள் | 67 | 67 | 100* | 7 | 1 |
| டெல்ரா பாலங்கள் | 4 | 4 | 4 | - | - |
| அற்லஸ் பாலங்கள் | 6 | 6 | 6 | - | - |

* சீ – 200 பாலங்கள் சரிபடுத்தக்கூடிய பாலங்களாகவிருந்த முன்னர் இலக்கிடப்பட்டதிலும் பார்க்க அதிகமான பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) திருகோணமலை வெளிவட்ட வீதியில் 2009 தொடக்கம் 2010 வரை ரூபா 3,495 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 8 பாலங்கள் வீதி நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டமையால் பயன்பாடின்றி இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 10 பாலங்களின் நிர்மாண வேலைகள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று பட்டியல் இடப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாண வேலைகள் 2014 இல் ரூபா 36.53 மில்லியன் கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. தகுந்த காரணங்களை கருத்திற்கொள்ளாமல் செயற்திட்டம் பல கால நீடிப்புக்களை அனுமதித்திருந்ததுடன் அதன் வினைவாக தாமதக் கட்டணங்கள் நியாய பூர்வமாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 78.19 மில்லியன் பெறுமதியான இரும்புப் பால கூறுகள் குளியாப்பிட்டியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளரின் அலுவலகத்திற்கு கதெனியா, அபலதெனியா வீதியில் பாலத்தை நிர்மாணிப்பதற்காக 2010 ஏப்ரல் 08 ஆம் திகதியும் 2010 ஆகஸ்த்து 16 ஆம் திகதியும் கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் பாலங்களின் நிர்மாண வேலைகள் 5 ஆண்டுகள் காலங்கடந்த பின்னரும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.